# மணிமேகலையில் யாப்பியல் கூறுகள்

ஆய்வாளர்

**இ.அன்டோ மோனிகா,**

பதிவு எண்: 21211284022018,

முனைவர் பட்ட ஆய்வாளர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

தமிழ் உயராய்வு மையம்,

தூய சவேரியார் கல்லூரி(தன்னாட்சி),

பாளையங்கோட்டை-627002.

நெறியாளர்

**முனைவர்.சூ.ஜா.இதயராஜா,**

தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்,

தூய சவேரியார் கல்லூரி

(தன்னாட்சி),

பாளையங்கோட்டை-627002.

**ஆய்வுநோக்கம்**
ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை ஒப்பற்ற தத்துவக் காப்பியமாகத் திகழ்கிறது. அதுமட்டுமின்றி இக்காப்பியத்திற்கு இரட்டைக் காப்பியம் என்ற பெயரும் பெற்று வருகிறது. இந்தியத் தத்துவங்களாகிய தாரகைகளின் நடுவே பௌத்தத் தத்துவம் தண்ணிலவாக ஒளி வீசும் என்கின்ற உண்மைத்தத்துவத்தை தமிழகத்தார்க்கு வழங்கும் பொருட்டும் புத்தரின் பொன்மொழிகள் தமிழகம் எங்கும் பரவும் பொருட்டும் இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது தெரிகின்றது. மேலும் இக்காப்பியத்தில் இலக்கணத்தின் தாக்கம் எந்த அளவு அமைகின்றது என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

**முன்னுரை**
செய்யுள் உறுப்புகளின் இலக்கணமும் செய்யுளியல்யாவும் பாவினமும் ஆகிய செய்யுட்களின் இலக்கணமும் கூறப்படும் இயல்- இலக்கணம். மணிமேகலையில் விழாவறை காதை முதல் வஞ்சிமாநகர் புக்க காதை வரையும் நிலைமண்டில ஆசிரிய யாப்பினால் பாடப்பெற்றவை. கச்சிமாநகர் புக்க காதையும் இவ்யாப்பில் அமைந்துள்ளது. இவ்வாறு மணிமேகலையில் யாப்பு இலக்கணத்தின் பங்கை பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**காப்பியத்தின் பா வடிவம்**
முற்காலக் காப்பியங்கள் ஆகிய சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலியவை ஆசிரிய யாப்பினால் புனையப்பெற்றவை. இவற்றுள் சிலப்பதிகாரம் மட்டும் பிற பாவடிவங்களும் விரவி வந்துள்ளன. பின்னர் வந்த காப்பியங்கள் ஆகிய சீவகசிந்தாமணி, சூளாமணி, இராமவதாரம் முதலியவை விருத்தயாப்பினால் யாக்கப்பெற்றவை. மணிமேகலையில் விழாவறை காதை முதல் வஞ்சிமாநகர் புக்க காதை வரையும் நிலைமண்டில ஆசிரிய யாப்பினால் பாடப்பெற்றவை. கச்சிமாநகர் புக்க காதையும் இவ்யாப்பில் அமைந்துள்ளது. சமயக் கணக்கர்தம் திறம்கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றகாதை என்பன மூன்றும் சமய, தத்துவ, தருக்கப்பொருண்மையில் அமைந்துள்ளதால், குறுகியும் பெருகியும் சீர்களைச் செப்பம் செய்து யாக்கவேண்டிய சூழலில் இவை இணைக் குறளாசிரியப் பாக்களாக இயற்றப் பெற்றுள்ளன.

**மணிமேகலையில் தொடை வனப்பு**
உரைநடையினின்றும் பாட்டினை வேறுபடுத்திக் காட்டும் உறுப்புகளில் தொடை சிறப்பிடம் பெறுகிறது. எழுத்துக்கள் தொடுக்கப்படுவது தொடை எனப்படும். சீர்தோறும் அல்லது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றாக வரத் தொடுப்பது மோனைத்தொடை என்றும், இரண்டாவது எழுத்து ஒன்றாக

வரத் தொடுப்பது எதுகைத்தொடை எனவும், மோனை, எதுகை போன்ற தொடை இன்றித் தொடுக்கப்படுவது செந்தொடை எனப்படும். இப்பின்புலத்துடன் மணிமேகலையில் தொடைகள் பயின்றுள்ளது.

**மோனைத்தொடை**

**தா**மரை **த**ண்மதி சேர்ந்தது போல (மணிமேகலை:3-12)
**ம**றவணம் நீத்த **மா**சறு கேள்வி (மணிமேகலை:2-60)
**பா**ரா வாரம் **ப**ல்வளம் **ப**ழுநிய (மணிமேகலை:3-28)

**எதுகைத்தொடை**

வ**ல்**லுந கொ**ல்**லோ மடந்தை தன்னடை (மணிமேகலை:3-153)
வ**ஞ்**ச வி**ஞ்**சையன் மாருத வேகனும் (மணிமேகலை:6-27)
ச**க்**கர வாளக் கோட்டம் பு**க்**கால் (மணிமேகலை:6-24)

**செந்தொடை**

நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலா (மணிமேகலை:1-54)
உலகுதுயர் கெடுப்ப அருளிய அந்நாள் (மணிமேகலை:9-37)
யாவரும் வருகவென் றிசைத்துடன் ஊட்டி (மணிமேகலை:13-113)

**மணிமேகலையில் அசை**

தொல்காப்பியர் காலத்தில் நேர்பு, நிரைபு என்ற வாய்பாட்டுச் சீர்கள் ஓரசைச் சீர்களாகவே விளங்கின. ஆயினும் மணிமேகலையில் இவை முறையே தேமா, புளிமா என்னும் வாய்பாட்டு ஈரசைச் சீர்களாக எண்ணப்பெற்றன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

**நேர்பு - தேமா**

**ஏது** நிகழ்ச்சி எதிர்ந்துள தாதலின் (மணிமேகலை:3-4)
ஆங்கது **கேட்**டு வீங்கிள முலையோடு (மணிமேகலை:4-61)

**நிரைபு – புளிமா**

**குரங்கு** செய்கடற் குமரியம் பெருந்துறை (மணிமேகலை:5-37)
உலக நோன்பின் பலகதி **உணர்ந்து** (மணிமேகலை:5-72)

**மணிமேகலையில் நடை**

ஒரு பாட்டு நடப்பது போல் இன்னொரு பாட்டு நடக்காது ஆதலின் நடை வேறுபாட்டினைக் கொண்டு பாட்டின் அமைப்பு வேறுபாட்டினை அறிதல் வேண்டும். காப்பியக் கவிஞர் ஒருவரின் நடைபோல் இன்னொருவரின் நடை அமைவதிவதில்லை. நடை வேறுபாடு கவிஞரின் தனித்தன்மைக்கு சான்றளிக்கிறது. இப்பின்புலத்துடன் மணிமேகலையில் வரும் கதைமாந்தர்களின் தன்மைக்கு ஏற்ப சாத்தனார் பல்வகை நடைப்போக்கினை அமைத்துள்ளார்.

**உரையாடல் நடை**

கதைமாந்தர் இருவர் தம்முள் உரையாடல் நிகழ்த்தும் வடிவத்தில் அமைவது உரையாடல் நடை எனப்படும்.

உதயகுமரன்

மாதர் தன்னொடு மயங்கினை இருந்தோய்!
யாதுநீ உற்ற இடுக்கண்? (மணிமேகலை:4.59-60)

எட்டிகுமரன்

வெம்பகை நரம்பின் என்கைச் செலுத்தியது
இதுயான் உற்ற இடும்பை. (மணிமேகலை:4.70-71)

**பேச்சு நடை**

பொன்னேர் அனையாய்! புகுந்தது கேளாய்
உன்னோடு இவ்வூர் உற்றதொன்று உண்டுகொல்.(மணிமேகலை:2.16-17)

**கட்டளை நடை**

மேனிலையில் இருப்போர் ஏனையோர்க்குக் கட்டளை இடுதல் உண்டு. சில வேளைகளில் இது வேண்டுகோள் ஆகவும் அமையும்.

**வாழ்த்து நடை**

அரசரையோ, தனி மனிதரையோ, மக்களையோ வாழ்த்துவதாக அமைத்து உருவாக்கப்பட்ட தொடர்களில் வாழ்த்துநடை இயல்பாகவே அமைந்துவிடும்.

வானம்மும் மாரி பொழிக! மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக! (மணிமேகலை:1.33-34)

**வேண்டுதல் நடை**

மணிபல்லவத் தீவில் கோமுகி இலஞ்சியில் அட்சய பாத்திரம் பெற்ற அறச்செல்வி மணிமேகலை, புத்தர்பிரானை நோக்கிப் பிரார்த்தனை புரிவதாக அமைந்த காப்பியத் தொடர்கள் வேண்டுதல் இந்நடைக்குத் தகுந்த சான்றாகும்.

மாரனை வெல்லும் வீர! நின்னடி
……………ஒழிப்போய்! நின்னடி (மணிமேகலை:11.61-70)

**மணிமேகலையில் இயற்சொற்கள்**

யாவர்க்கும் பொருள் விளங்கக் கூடிய சொற்கள் யாவும் இயற்சொற்கள் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| அங்கு 14.86 | இரவு 6.68 | உச்சி 22.13 | சேர்ந்து 21.79 |
| ஆயிரம் 1.36 | உயிர் 14.88 | என் 14.88 | தெருவு 4.38 |

**மணிமேகலையில் திரிசொற்கள்**

திரிசொல் இரு வகைப்படும். ஒன்று ஒரு பொருள் குறித்து வரும் பல சொற்கள். மற்றொன்று பல பொருள் குறித்த ஒரு சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| அழல் 16.23 | சினம் 10.59 | மழை 26.42 | சித்திரம் 19.6 |
| கலம் 16.114 | மெய் 19.8 | உடல் 23.73 | பௌவம் 18.64 |

**மணிமேகலையில் வடசொற்கள்**

சாத்தனார் வடமொழிப் பனுவல்கள் பலவற்றையும் குறிப்பாகச் சமய, தருக்க, தத்துவ நூல்களையும் அவற்றின் பழைய உரைகளையும் ஆழ்ந்து பயின்றவர் என்பதற்கு அவர் காப்பியத்தில் வழங்கியுள்ள வடமொழிச் சொற்களே சான்று ஆகும்.

தீவகச் சாந்தி 1.35, 24.62 சாப சரத்தி 5.16 வருணம் 5.87
விருச்சிகன் 17.28 வாசவன் 24.69 விஞ்சை 19.147

**முடிவுரை**

மணிமேகலைக் காப்பியக் கட்டமைப்பில் கதை முதன்மை பெறுகிறது. இக்கதை பல்வேறு பிறப்புக்கதைகளாலும் கிளைக்கதைகளாலும் சாத்தனாரால் நேர்த்தியாகப் பின்னப்பெற்றுள்ளன. காப்பிய யாப்பின் சிறப்புக் கூறுகளும் நடைப்பொலிவும் சொல்வகைகளும் பெற்று விளங்குகிறது. இவ்வாறு மணிமேகலையில் யாப்பின் உறுப்புகள் பயின்று வருகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1.கே.டி.கே.தங்கமணி - மணிமேகலைபற்றி
நியூ செஞ்சுரி பதிப்பகம்
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-600028.
2.இரா.சுகுமாரி ராஜம் - மணிமேகலை காப்பியத்தில் மீவியல்புகள்
பல்லவி பதிப்பகம்
ஈரோடு-638011.
3.முனைவர்.ர.விஜயலட்சுமி - தமிழக மகளிர்
சந்தியா பதிப்பகம்
சென்னை-83
4.ந.மு.வேங்கடசாமிநாட்டார் - மணிமேகலை மூலமும் உரையும்
சாரதா பதிப்பகம்
சென்னை-600014.